Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, செப்டம்பர் 25, 2026 | இதழ் 165

## சென்னை விமான நிலையம் தனியார்மயம்: முதல்வர் கடிதத்திற்கு விமான நிலைய ஆணையம் விளக்கம்



சென்னை, 25 செப்டம்பர் 2026: சென்னை விமான நிலையம் தனியாருக்கு மாற்றுவது குறித்த முதல்வர் கடிதத்திற்கு விமான நிலைய ஆணையம் விளக்கமளித்துள்ளது.

சென்னை விமான நிலையத்தின் நிர்வாகத்தை மாற்றக் கோரி, கடந்த ஆகஸ்ட் மாதம் முதல்வர் விஜய் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்த நிலையில், அந்தப் புகாரின் மீது விளக்கமளிக்குமாறு மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் தற்போது இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் (ஏஏஐ) கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த செப்டம்பர் 10-ஆம் தேதி விளக்கம் கேட்கப்பட்ட நிலையில், அது குறித்த விவரங்களை விமான நிலைய ஆணையம் தற்போது மத்திய அரசுக்கு அளித்துள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டில் விமான எரிபொருளுக்கு விதிக்கப்படும் 29% வாட் வரி அதிகமாக இருப்பதால், விமான சேவைகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, விமான இயக்க நேரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விமான முனையங்களில் அதிகளவில் வரும் விஜபி வாகனங்களால் ஏற்படும் பிரச்சனைகளும் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூர் பிரச்சனைகள் காரணமாக அந்த விமான நிலையத்தின் செயல்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதே சமயம், கடந்த 2025 மற்றும் 2026 ஆம் நிதி ஆண்டுகளில் பயணிகளின் போக்குவரத்து 2.7% அதிகரித்துள்ளதாக இந்த விளக்கக் கடிதத்தில் விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், சரக்குகளைக் கையாளும் திறன் அதிகரித்துள்ளதாகவும், சுமார் 15,500 மெட்ரிக் டன் அளவிலான ஆப்பிள் ஐபோன்கள் சென்னை விமான நிலையம் மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு விரிவாக்கப் பணிகள் உள்ளிட்ட திட்டங்களுக்குத் தேவையான உரிய அனுமதிகள் தகுந்த நேரத்தில் கிடைக்கவில்லை என்று அந்தக் கடிதத்தில் இந்திய விமான நிலைய ஆணையம் (Airport Authority) குறிப்பிட்டுள்ளது. மாநில அளவிலான கட்டமைப்பு வசதிகள் இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும், அதற்கான அனுமதிகள் தேங்கிய நிலையில் உள்ளதாகவும் விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது.

## பிறநாட்டு மக்களை ஏமாற்றி வரவழைத்து, வற்புறுத்தி போரில் ஈடுபடுத்தும் ரஷ்யா.!! உக்ரைன் பகீர் குற்றச்சாட்டு



சென்னை 25, செப்டம்பர் 2026: தங்களுக்கு எதிரான போரில் ரஷ்யா 47 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களைப் பயன்படுத்தி வருவதாக உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி குற்றம் சாட்டி உள்ளார். உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஜெலென்ஸ்கி ஐ.நா பொதுச் சபையில் பேசுகையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், உக்ரைனுக்கு எதிராகப் போரிடுவதற்காக வட கொரியா, நேபாளம், சூடான், கியூபா, கானா மற்றும் இந்தியா உள்ளிட்ட 47 நாடுகளைச் சேர்ந்த மக்களை திரட்டி தனது போருக்குப் பயன்படுத்தி வருவதாக பகிரங்கமாக குற்றம் சாட்டி உள்ளார்.

பிறநாட்டு மக்களை ரஷ்யா தனது போருக்காக பயன்படுத்தும் சூழலில், அந்நாடுகளிடம் நான் நேரடியாகக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான் புடினின் போருக்குள் சிக்கிக் கொள்ளாதீர்கள். உங்கள் மக்களின் உயிரைப் பயன்படுத்த அனுமதிக்காதீர்கள் என உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார். இது குறித்து சற்று விரிவாக பேசியுள்ள உக்காரன் அதிபர், அதிக சம்பளம் தரும் சிவில் வேலைகள், உயர்கல்வி அல்லது வணிக வாய்ப்புகள் என்ற பெயரில் ஏமாற்றி, வெளிநாட்டு மக்களை ரஷ்யா வரவழைப்பதாக குற்றம் சாட்டினார். அவ்வாறு வருபவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு அல்லது ஏமாற்றப்பட்டு போர்க்களத்திற்கு அனுப்பப்படுவதாக கூறினார்.

போர்க்களத்தில் ரஷ்யப் படைகளுக்காகப் போரிட்ட பல வெளிநாட்டினரை உக்ரைன் ராணுவம் போர்க்கைதிகளாகப் பிடித்துள்ளதாக அவர் கூறினார். சில நாடுகள் தங்கள் நாட்டு கைதிகளைத் திருப்பி அனுப்பக் கோரி உக்ரைனை அணுகியுள்ளதாகவும் தெரிவித்தார்.உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்குப் பயன்படும் நிதி ஆதாரங்களைத் தடுக்கும் வகையில், ரஷ்யா மீது உலக நாடுகள் கடும் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்றும் ஜெலென்ஸ்கி வலியுறுத்தி உள்ளார்.




## மீனவர்கள், திமுக, அதிமுக, பொதுமக்கள் எதிர்ப்பு- எதிரொலி தலைமை செயலகம் கட்டும் திட்டம் ரத்தாகிறதா? புதிய அரசாணை வெளியிட முதல்வர் விஜய் முடிவு



சென்னை, 25 செப்டம்பர் 2026: மீனவர்கள், திமுக, அதிமுக உள்ளிட்ட அரசியல் கட்சியினர், பொதுமக்கள் எதிர்ப்பு காரணமாக பட்டினப்பாக்கத்தில் ரூ.1,200 கோடியில் புதிய தலைமை செயலகம் கட்டும் திட்டம் ரத்து செய்யப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இதற்கான புதிய அரசாணை வெளியிட முதல்வர் விஜய் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழக சட்டப்பேரவையில் கடந்த 3ம் தேதி காவல் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்றது. அப்போது முதல்வர் விஜய், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில், "சென்னையில் நவீன வசதிகளுடன் கூடிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகம் அடங்கிய புதிய கட்டிட வளாகம் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும். தீயணைப்பு வசதிகள், மாற்றுத்திறனாளிகள் சென்றுவர வசதிகள் மற்றும் பசுமைக் கட்டிட தரநிலைகளுக்கு உட்பட்டு நவீன நிர்வாக வளாகம் உருவாக்கப்படும்.

போதுமான வாகன நிறுத்துமிடங்கள், மாநாட்டு அரங்குகள், பொதுமக்கள் சேவை மையங்கள் மற்றும் அலுவலர்களுக்கான நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும். அனைத்து அரசு துறைகளையும் ஒரே நிர்வாக வளாகத்தில் கொண்டுவந்து ஒருங்கிணைக்கப்படும்" என்றார். இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, கடந்த 9ம் தேதி தமிழக அரசு ஒரு அரசாணை வெளியிட்டது. அதில், "சென்னை, பட்டினப்பாக்கத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை மாநகராட்சி மற்றும் வருவாய்த்துறை ஆகியவற்றுக்கு சொந்தமான மொத்தம் 25.55 ஏக்கர் நிலங்கள் புதிய கட்டிட வளாகம் கட்டுவதற்காக அடையாளம் காணப்பட்டன. இந்த இடத்தில், 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய புதிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகக் கட்டிட வளாகம் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி அரசாணை வெளியிட்டுள்ளது. அதில் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை மதிப்பீடுகளுடன் சேர்த்து மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு பொதுப்பணித் துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், இதற்கான கட்டிடகலை ஆலோசனை நிறுவனத்தை தேர்ந்தெடுப்பதற்கும், ஆரம்ப மற்றும் இறுதி கட்டட கட்டிட வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புகளை இறுதி செய்வதற்கும் மூன்று பிரத்யேக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது" என்று உத்தரவிடப்பட்டு இருந்தது.

பட்டினப்பாக்கத்தில், புதிய தலைமைச் செயலகம் கட்டுவதால், தங்கள் - வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனக் கூறி, மீனவர்கள் கடந்த ஒரு வாரமாக கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அந்த பகுதியில் உள்ள 9 மீனவ கிராம மக்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் பல்வேறு போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். இதுதவிர, திமுக, அதிமுக, பாமக, இ.கம்யூ., மா.கம்யூ., நாம் தமிழர் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளும், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் கட்டும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தன. பொதுமக்களும், பட்டினப்பாக்கம் மிகவும் போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி. 12க்கும் மேற்பட்ட பள்ளிகள் அந்த சாலையில் உள்ளது. தலைமை செயலகம் கட்டினால் இன்னும் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்று குற்றம் சாட்டினர். மேலும் புதிய தலைமைச் செயலக கட்டுமானத்தை எதிர்த்து திமுக சார்பில் நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பட்டினப்பாக்கத்தில், புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கு வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்ய முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுதொடர்பாக பொதுத்துறை செயலாளருக்கு அவர் அறிவுறுத்தல் வழங்கி உள்ளார். அத்துடன் தலைமைச் செயலகத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய இடம் குறித்த விபரத்துடன், புதிய அரசாணை விரைவில் வெளியிட அவர் உத்தரவிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ஆசிய விளையாட்டுப் போட்டியின் வுஷு மகளிர் 60 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற நௌரெம் ரோஷிபினா தேவிக்குப் பிரதமர் வாழ்த்து



சென்னை 25, செப்டம்பர் 2026: ஆசிய விளையாட்டுப் போட்டியின் வுஷு மகளிர் 60 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற நௌரெம் ரோஷிபினா தேவிக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, மூன்று ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்றது குறிப்பிடத் தக்க சாதனையாகும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய தொடர் சாதனைகள், துணிச்சல், உறுதிப்பாடு ஆகியவை உண்மையில் பாராட்டத்தக்கது என்று அவர் கூறியுள்ளார். அத்துடன், அவருடைய அனைத்து எதிர்கால முயற்சிகளுக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் அலுவலகம் பகிர்ந்திருப்பதாவது:

"வுஷு மகளிர் 60 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற நௌரெம் ரோஷிபினா தேவிக்கு வாழ்த்துகள். தொடர்ந்து, மூன்று ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்றது குறிப்பிடத்தக்க சாதனையாகும். அவருடைய தொடர் சாதனைகள், துணிச்சல், உறுதிப்பாடு ஆகியவை உண்மையில் பாராட்டத்தக்கது.

அவருடைய அனைத்து எதிர்கால முயற்சிகளுக்கும் தமது வாழ்த்துகள்."

# தாம்பரத்தில் புதிய அனுபவ மையத்தைத் தொடங்கிய ஹோம் லேன்



சென்னை 25, செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த வீட்டு உள் அலங்கார நிறுவனமான ஹோம் லேன், சென்னையில் தனது நான்காவது அனுபவ மையத்தை செம்பாக்கம்-தாம்பரத்தில் தொடங்கியுள்ளது. 1,500 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த புதிய மையம், செம்பாக்கம்-தாம்பரம் பகுதியில் ஹோம் லேன் நிறுவனம் தனது செயல்பாட்டை விரிவுபடுத்துவதைக் குறிக்கிறது. இந்த அனுபவ மையம் யுவா பிரசாத் மற்றும் தருண் ஸ்டீபன் ராஜ் ஆகியோரின் கூட்டாண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

பிரபல தென்னிந்திய நடிகை அதுல்யா ரவி முன்னிலையில் இந்த புதிய மையம் திறந்து வைக்கப்பட்டது. வீட்டு உரிமையாளர்களுக்கு முழுமையான உள் அலங்கார அனுபவத்தை வழங்கும் வகையில், இந்த மையத்தில் நவீன சமையலறைகள், அலமாரிகள் மற்றும் முழுமையான வீட்டு உள் அலங்காரத் தீர்வுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் உயர்தரப் பொருட்களை நேரடியாகப் பார்வையிடுவதுடன், யதார்த்தத் தோற்றத்துடன் கூடிய காட்சிகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசனைகளையும் ஒரே இடத்தில் பெறலாம்.

ஹோம் லேனின் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஸ்பேஸ் கிராஃப்ட் தளத்தின் மூலம், வாடிக்கையாளர்கள் தங்களது வீட்டின் உள் அலங்காரத்தை முப்பரிமாண வடிவில் காட்சிப்படுத்திப் பார்க்கவும், உடனடி விலை விவரங்களைப் பெறவும், வடிவமைப்பிலிருந்து செயல்படுத்துதல் வரையிலான பணிகளை தடையின்றி மேற்கொள்ளவும் முடியும். வெளிப்படையான விலை நிர்ணயம், திட்டமிட்ட காலக்கெடு, 45 நாட்களில் பணிகளை நிறைவு செய்வதற்கான உத்தரவாதம், 10 ஆண்டுகளுக்கான பொருள் உத்தரவாதம் மற்றும் முழுமையான திட்ட மேலாண்மை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

இந்திய அளவில் விரிவாக்கம் செய்யும் ஹோம் லேனின் உரிமையாளர் சார்ந்த, உரிமையாளர் நிர்வகிக்கும் (எஃப்ஓஎஃப்ஓ) திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்குள் நாடு முழுவதும் 100 அனுபவ மையங்களை உருவாக்கும் இலக்குடன் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இந்தத் தொடக்க விழாவில் பேசிய ஹோம் லேனின் இணை நிறுவனர் மற்றும் தலைமைச் செயல்பாட்டு அதிகாரி தனுஜ் சௌத்ரி, "சென்னை எப்போதும் ஹோம் லேனுக்கு முக்கியமான சந்தையாக இருந்து வருகிறது. செம்பாக்கம்-தாம்பரத்தில் புதிய மையத்தைத் தொடங்குவதன் மூலம், வேகமாக வளர்ந்து வரும் இந்த குடியிருப்புப் பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த முழுமையான உள் அலங்கார சேவைகளை நெருக்கமாகக் கொண்டு செல்கிறோம். எங்களது எஃப்ஓஎஃப்ஓ திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் மேலும் பல வாடிக்கையாளர்களைச் சென்றடைய இலக்கு வைத்துள்ளோம்," என்றார்.

# நிதியாண்டு 26-ல் 33.88 மில்லியன் மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்திய இண்டஸ் டவர்ஸ் நிறுவனத்தின் சமூக பொறுப்புறுதி திட்டங்கள்

சென்னை 25, செப்டம்பர் 2026: டிஜிட்டல் கட்டமைப்பும், தொழில்நுட்பமும் பல கோடிக்கணக்கான மக்களை இணைக்கும் பணியைத் தொடர்ந்து செய்து வரும் இந்த நவீன யுகத்தில், உண்மையான முன்னேற்றம் என்பது, திறன் உருவாக்கத்தில் சமமான வாய்ப்புகளை அனைவருக்கும் வழங்குவதில்தான் உள்ளது. ஊர், பாலினம் அல்லது பொருளாதாரம் என எந்தப் பாகுபாடும் இல்லாமல், இந்தியாவின் வளர்ச்சியில் பங்கெடுக்க அனைவருக்கும் சமமான வாய்ப்புகள், திறன்கள் மற்றும் வளங்கள் கிடைப்பதை உறுதி செய்யும்போதுதான் நிஜமான முன்னேற்றம் சாத்தியமாகும். இண்டஸ் டவர்ஸ் லிமிடெட் நிறுவனம், தனது முக்கிய சமூக பொறுப்புறுதி (சிஎஸ்ஆர்) திட்டங்களான 'சக்ஷம்' மற்றும் 'பிரகதி' மூலம் இந்த நோக்கங்களுக்காக பணியாற்றி வருகிறது. எஃப்ஒய்26 ஆம் ஆண்டில் 33.88 மில்லியன் (சுமார் 3.38 கோடி) மக்களின் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள இத்தகைய சமூகநலத் திட்டங்களின் மூலம் பலனடைந்துள்ள ஒட்டு மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை இந்தியா முழுவதும் 90 மில்லியனைக் கடந்திருக்கிறது.

மக்களுக்கு டிஜிட்டல் திறன்கள், கல்வி, சிறந்த மருத்துவ வசதி, வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் நிரந்தரமான உள்கட்டமைப்பு ஆகியவற்றை வழங்கி அவர்களை திறனதிகாரம் பெற்ற நபர்களாக மாற்றுவதே இண்டஸ் டவர்ஸ் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். சமூகங்களின் வளர்ச்சிக்காக மட்டுமின்றி, மக்களுடன் இணைந்த வளர்ச்சியையும், மேம்பாட்டையும் சாத்தியமாக்குவதே இந்நிறுவனத்தின் சமூக பொறுப்புறுதி திட்டங்களின் குறிக்கோளாகும். உள்ளூர் அமைப்புகள், அரசு நிறுவனங்கள், திட்டங்களை செயல்படுத்தும் கூட்டாளிகள் மற்றும் பயனாளிகளுடன் இணைந்து மக்களின் தேவைகளை அறிந்து, அதற்கான தீர்வுகளை உருவாக்கி, அவர்களுக்கு நீண்டகாலப் பயனை அளிப்பதே இதன் இலக்காகும்.

நிறுவனத்தின் சி.எஸ்.ஆர் திட்டங்கள் குறித்து இண்டஸ் டவர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு. பிரசூர் சாஹ் கூறுகையில், "அனைவரையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி இருக்கும் போது மட்டுமே இந்தியாவின் முன்னேற்ற பயணம் உண்மையிலேயே ஆக்கபூர்வ மாற்றத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு மனிதரும் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளத் தேவையான வாய்ப்புகளையும், வளங்களையும், ஆதரவையும் பெற வேண்டும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எங்களின் சமூக பொறுப்புறுதி திட்டங்கள் மூலம், இந்தியாவின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் மக்கள் பங்கெடுக்கத் தேவையான அறிவு, திறன் மற்றும் வாய்ப்புகளை வழங்கி அவர்களை முன்னேற்றுவதில் கவனம் செலுத்துகிறோம். நாங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக, அரசுடனும் மற்றும் கூட்டாளிகளுடனும் இணைந்து செயல்படுகிறோம். இனிவரும் காலத்திலும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய, வலிமையான மற்றும் எதிர்காலத்திற்குத் தயார் நிலையிலுள்ள இந்தியாவை உருவாக்கும் எமது பணி தொடரும்," என்றார்.

# வீரமணியும், அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள், அவரைக் காப்பாற்ற முயன்றவர்கள் எவராயினும், எத்தகைய பொறுப்பில் இருந்தவர்கள் ஆயினும் தப்பிக்க கூடாது - மு க ஸ்டாலின்



சென்னை 24, செப்டம்பர் 2026: சிறுமிகளுக்கு எதிரான மனிதத்தன்மையற்ற இழிவான செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜெம் வீரமணி கைது செய்யப்பட்டுள்ளார். இதில் வீரமணியும், அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள், அவரைக் காப்பாற்ற முயன்றவர்கள் எவராயினும், எத்தகைய பொறுப்பில் இருந்தவர்கள் ஆயினும் தப்பிக்க கூடாது. அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அதிகபட்ச தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு. இந்த வழக்கின் முடிவு, இனி இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடும் எண்ணமே எவருக்கும் வராத வகையில் அமைய வேண்டும் என்பதுதான் ஓர் அரசியல் இயக்கத்தின் தலைவனாகவும், ஒரு குடும்பத்தலைவனாகவும், மனசாட்சி உள்ள மனிதனாகவும் எனது விருப்பம்.


ஆனால், இந்த வழக்கில் தேவையே இல்லாமல், குறுகிய அரசியல் நோக்கத்துடன் தி.மு.கழகத்தின் மீது பொய்யாக அவதூறுகளைப் பரப்பி, ஒரு கூட்டம் குளிர்காய்ந்து வருவது மிகவும் அருவெறுப்பான செயலாகும். வீரமணி வழக்கில் யாரையும் காப்பாற்ற எந்த உத்தரவும் கழக ஆட்சியில் பிறப்பிக்கப்படவில்லை.

பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் பாரபட்சமின்றி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, தண்டனை பெற்றுத் தரப்பட்டது. இவை அனைத்தும் பொது வெளியில் இருக்கும், மறுக்க முடியாத உண்மைகள் ஆகும். எவரையும் காப்பாற்ற வேண்டிய தேவை கழக ஆட்சிக்கு இல்லை.

தற்போதைய த.வெ.க. ஆட்சியில் நடப்பதுபோல, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மீது அனைத்துப் பத்திரிகைகளின் முன்பும் பாதிக்கப்பட்ட பெண்கள் பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்த பின்னரும், நடவடிக்கை எடுக்காமல், சமரசம் பேசி வழக்கை முடித்து வைக்கும் இழிசெயல்கள் கழக ஆட்சியில் நடைபெறவில்லை.

எனவே, சிறுமிகளுக்கு ஏற்பட்ட துயரத்தை இடைத்தேர்தலுக்கான கருவியாகப் பயன்படுத்தும் இழிவான செயலையும், முற்றிலும் பொய்யான அவதூறுகளை ஊடகங்கள் மூலமாக பரப்புவதையும் ஆளும்கட்சியினர் நிறுத்திக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதி பெற்றுத் தருவது மட்டுமே நம் அனைவரின் நோக்கமாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

# இயற்கை வைரங்கள் மீதான விருப்பத்தை மீண்டும் தூண்டும் ஒரு புதிய உத்தியுடன், இயற்கை வைர அமைச்சகம் தி டைமண்ட் கலெக்டிவ் என்ற பெயரில் மீண்டும் தொடங்கவுள்ளது



சென்னை 25, செப்டம்பர் 2026: இன்று, இயற்கை வைரக் கவுன்சில், 'தி டைமண்ட் கலெக்டிவ்' எனப் பெயரைக் கொண்டு, இயற்கை வைரங்களை கலாச்சாரத்துடன் மீண்டும் இணைக்கவும், நுகர்வோர் நம்பிக்கையை வலுப்படுத்தவும், நீண்டகாலப் பொருந்தும் தன்மையை முன்னெடுத்துச் செல்லவும் ஒரு புதிய உலகளாவிய உத்தியை வெளியிடுகிறது.

உற்பத்தியாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், பிராண்டுகள், படைப்பாளிகள் மற்றும் நுகர்வோருடன் ஆறு மாத கால கலந்தாலோசனைக்குப் பிறகு, புதிய தலைமை நிர்வாக அதிகாரி ஆம்பர் பெப்பரால் வடிவமைக்கப்பட்ட இந்த உத்தியானது, மக்கள் ஆடம்பரப் பொருட்களைக் கண்டறிந்து, மதித்து, வாங்கும் விதத்தில் ஏற்பட்டுள்ள ஒரு அடிப்படை மாற்றத்திற்குப் பதிலாக உள்ளது. இது 'தி டைமண்ட் கலெக்டிவ்' முன்மொழிவுக்கான ஒரு தெளிவான இலக்கை நிர்ணயிக்கிறது: இயற்கை வைரங்கள் மீதான ஆசையை மீண்டும் தூண்டி, அந்த ஆசையை நீடித்த தேவையாகவும் மாற்றுகிறது.

இந்த முன்னுரிமைகள் ஒன்றிணைந்து ஒரு தீர்க்கமான மாற்றத்தைக் குறிக்கின்றன: அதாவது, ஒரு பிரிவைப் பாதுகாப்பதிலிருந்து விருப்பத்தைப் புதுப்பிப்பதற்கும்; தனித்தனிப் பிரச்சாரங்களிலிருந்து ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகளாவிய வளர்ச்சித் திட்டத்திற்கும்; மற்றும் தொழில்துறைப் பிரதிநிதித்துவத்திலிருந்து பகிரப்பட்ட செயல்பாடு, முதலீடு மற்றும் அளவிடக்கூடிய வணிகத் தாக்கம் ஆகியவற்றுக்குமான மாற்றம்.

பண்பாட்டுக்கு ஏற்ற விளம்பரங்கள், ஒரு உலகளாவிய நம்பக முத்திரை, வலுவான தோற்றம் மற்றும் மூல வரலாறு குறித்த விவரிப்புகள், புதுப்பிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர் மற்றும் வர்த்தக முத்திரை கூட்டாண்மைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு மற்றும் எண்ணிமக் கண்டுபிடிப்பில் முதலீடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு புதிய தலைமுறை உலகளாவிய திட்டங்களின் மூலம் இந்த உத்தி உயிரூட்டப்படும். மேலதிக முன்னெடுப்புகள், தவறான தகவல்களுக்கு எதிரான சான்றுகளின் அடிப்படையிலான பதில்களை வலுப்படுத்தும், உற்பத்தியாளர் நாடுகளை மேம்படுத்தும் மற்றும் கூட்டுத் தொழில் தலைமைத்துவத்திற்கான புதிய மன்றங்களை உருவாக்கும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## ஐஎஸ்எஸ் வேர்ல்டு எம்இஏ 2026-இல் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) சார்ந்த தேசிய பாதுகாப்பு தளங்களை Innefu லேப்ஸ் காட்சிப்படுத்தவுள்ளது

சென்னை 25, செப்டம்பர் 2026: தேசிய பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் முன்னணி செயற்கை நுண்ணறிவு (ஏஐ) நிறுவனமான Innefu லேப்ஸ், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் உள்ள ஜேடபிள்யு Marriott Marquis-இல் 2026 அக்டோபர் 6 முதல் 8 வரை நடைபெறவுள்ள ஐஎஸ்எஸ் வேர்ல்டு மிடில் ஈஸ்ட் & ஆப்பிரிக்கா (எம்இஏ) 2026 நிகழ்வில், 'அசோசியேட் லீட் ஸ்பான்ஸர்' (இணை முதன்மை அனுசரணையாளர்), கண்காட்சியாளர் மற்றும் விளக்கக்காட்சியாளராகப் பங்கேற்கவுள்ளது. இந்நிகழ்வில், சட்டம் அமலாக்கம், பாதுகாப்பு, உளவுத் துறை, நிதிசார் உளவுத் துறை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு முகமைகளுக்காக உருவாக்கப்பட்ட ஏஐ சார்ந்த தேசிய பாதுகாப்புத் தளங்களின் தொகுப்பை Innefu லேப்ஸ் காட்சிப்படுத்தும்.

ஐஎஸ்எஸ் வேர்ல்டு எம்இஏ 2026-இல் பங்கேற்பதன் மூலம், பாதுகாப்பு, உளவுத் துறை மற்றும் சட்டம் அமலாக்க முகமைகளுக்காக உருவாக்கப்பட்ட ஏஐ சார்ந்த தேசிய பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் தனது சமீபத்திய முன்னேற்றங்களை Innefu லேப்ஸ் வெளிப்படுத்தும். இதில், இத்தகைய சூழல்களுக்காக வடிவமைக்கப்பட்ட உலகின் முதல் ஆஃப்லைன், 'ஆன்-பிரமிஸ்' எல்எல்எம்-ஆன 'Sarvagata' கள மற்றும் கட்டளை நடவடிக்கைகளுக்குத் தன்னாட்சி நுண்ணறிவுத் திறன்களை வழங்கும் 'ஏஜென்டிக் ஏஐ-இன்-எ-பாக்ஸ்' தளம்; மற்றும் மூன்று துறைகளிலும் விசாரணைகளை ஆதரிப்பதற்காக 'டீப் வெப்' மற்றும் 'ஓபன் வெப்' ஆகியவற்றிலிருந்து தகவல்களை ஒருங்கிணைக்கும் 'டீப் வெப் ஃபியூஷன்' தளம் ஆகியவை அடங்கும். மேலும், நவீன பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஏஐ சார்ந்த 'Predictive Policing Platform' (முன்கூட்டியே கணிக்கும் காவல் சேவை தளம்), விரிவான OSINT தளம், ஏஐ/எம்எல் சார்ந்த வீடியோ மற்றும் படப் பகுப்பாய்வு (வீடியோ அண்ட் இமேஜ் அனலிட்டிக்ஸ்) மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு உளவுத்துறை ஒருங்கிணைப்புத் திறன்கள் (இண்டகிரேடட் டிபென்ஸ் இண்டலிஜென்ஸ் ஃபியூஷன்) ஆகியவற்றையும் இந்நிறுவனம் காட்சிப்படுத்தும்.

சிக்கலான தகவல்களைச் செயலாக்குவதிலும், சூழ்நிலை விழிப்புணர்வை (சிட்வேஷ்னல் அவேர்னஸ்) வலுப்படுத்துவதிலும், விரைவான முடிவெடுப்பதை ஆதரிப்பதிலும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு உதவும் வகையில் ஏஐ, உளவுத்துறை ஒருங்கிணைப்பு மற்றும் பாதுகாப்பான, முகமையின் கட்டுப்பாட்டில் உள்ள தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ந்து வரும் பங்கை இந்தக் காட்சிப்படுத்தல் பிரதிபலிக்கிறது.



மாநாட்டு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, Innefu லேப்ஸ்-இன் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி (சிஇஓ) தருண் விக், "மேம்பட்ட சூழ்நிலை விழிப்புணர்விற்கான கிமி சார்ந்த பாதுகாப்பு உளவுத்துறை ஒருங்கிணைப்பு மையம்" (ஏஐ-Powered Defence Intelligence Fusion Centre for Enhanced Situational Awareness) என்ற தலைப்பில் ஒரு அமர்வை நடத்தவுள்ளார். பல மூலங்களிலிருந்து தகவல்களை ஒருங்கிணைக்கவும், சூழ்நிலை விழிப்புணர்வை வலுப்படுத்தவும், விரைவான மற்றும் தகவலறிந்த முடிவெடுப்பதை ஆதரிக்கவும் ஏஐ சார்ந்த உளவுத்துறை ஒருங்கிணைப்பு எவ்வாறு உதவும் என்பதை இந்த அமர்வு ஆராயும்.

## "பயணம்" - முழுமையான போதை நீக்கம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம் புழல் மத்திய சிறை-2ல் தொடக்கம்

சென்னை 25, செப்டம்பர் 2026: நாட்டிலேயே முன்னோடித் திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படும் "பயணம்" (Positive Awareness Yielding Against Narcotics Addiction Movement) - போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கான முழுமையான போதை நீக்கம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம், இன்று மத்திய சிறை-2, புழல் வளாகத்தில் முன்னோடித் திட்டமாக தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தை தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர் திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் சந்தீப் ராய் ரத்தோர், ஐபிஎஸ் அவர்கள் தொடங்கி வைத்தார். போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களின் மறுவாழ்வின் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர் திருத்தப் பணிகள் துறை, போதை நீக்கம், நடத்தை மாற்றம், மறுவாழ்வு மற்றும் சமூகத்துடன் மீண்டும் இணைத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பயணம் திட்டத்தை ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டமாக வடிவமைத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆலோசனை, உளவியல் ஆதரவு, சிகிச்சை சார்ந்த தலையீடுகள், வாழ்க்கைத் திறன் மேம்பாடு மற்றும் மறுவாழ்வு ஆதரவு ஆகியவை ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படும்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய தலைமை இயக்குநர் அவர்கள், போதைப் பழக்கம் தனிநபரை மட்டுமின்றி அவரது குடும்பத்தையும் சமூகத்தையும் பாதிக்கிறது என்றும், எனவே சீர்திருத்த அமைப்பின் பொறுப்பு காவலில் வைப்பதுடன் முடிவடையாமல், சிகிச்சை, சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சமூகத்துடன் மீண்டும் இணைத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பல்வேறு வசதிகள் மற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கு தலைமை இயக்குநர் அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் வலியுறுத்திய போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு என்ற இலக்குடன் பயணம் திட்டம் இணைந்துள்ளது என்றும், விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுடன், போதை நீக்கம், சிகிச்சை, மறுவாழ்வு மற்றும் சமூகத்துடன் மீண்டும் இணைத்தல் ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இத் திட்டம் தற்போது முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படுவ தால், அதன் செயல்பாடுகள் மற்றும் விளைவுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். இதன் மூலம் பெறப்படும் அனுபவங்களின் அடிப்படையில் திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.

## Qlik மற்றும் ஐசிடி அகாடமி கூட்டாண்மை விரிவாக்கம்: இந்தியா முழுவதும் மேலும் 10 லட்சம் மாணவர்களுக்கு தரவு மற்றும் ஏஐ திறன்களை வழங்கத் திட்டம்

சென்னை 25, செப்டம்பர் 2026: Qlik® நிறுவனமானது இந்தியா முழுவதிலும் உள்ள மேலும் 10 லட்சம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் தரவு அறிவு (data literacy), பகுப்பாய்வு (analytics) மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) ஆகியவற்றில் நடைமுறை சார்ந்த, தொழில் முறைக்கு ஏற்ற கல்வியை வழங்கும் நோக்கில், ஐசிடி அகாடமியுடன் ஒரு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தனது கூட்டாண்மையை விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளது.

முதலாளிகள் எதிர்பார்க்கும் நடைமுறைத் திறன்களை வகுப்பறைப் பயிற்சியுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டு, நீண்ட காலமாகச் செயல்பட்டு வரும் இந்தக் கூட்டணி, இந்த ஒப்பந்தத்தின் மூலம் அடுத்தகட்டத்தை எட்டியுள்ளது. 'Qlik கல்வித் திட்டத்தின்' (Qlik அகாடெமிக் புரோகிராம்ஸ்) மூலம், இதில் பங்கேற்கும் நிறுவனங்கள், தங்களது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கார்ப்பரேட் அளவிலான தரவு மற்றும் பகுப்பாய்வுத் தொழில்நுட்பப் பயிற்சிகள், கட்டமைப்புடன் கூடிய பாடத்திட்டங்கள், தயாரிப்புத் தகுதிகள் (புராடெக்ட் குவாலிஃபிகேஷன்) மற்றும் சான்றிதழ் வழிகளை இலவசமாக வழங்கி, நேரடிப் பயிற்சியைப் பெற உதவ முடியும்.

புதுப்பிக்கப்பட்ட இந்தக் கூட்டாண்மையின் கீழ், Qlik மற்றும் ஐசிடி அகாடமி இணைந்து பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்:

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் 'சிறப்பு மையங்களை' (சென்டர்ஸ் ஆஃப் எக்சலென்ஸ்) நிறுவுதல் மற்றும் விரிவுபடுத்துதல்;




ஆசிரியர்கள் தங்களது பாடத்திட்டங்களில் தரவு அறிவு (data literacy), பகுப்பாய்வு (analytics), தரவு ஒருங்கிணைப்பு (data integration) மற்றும் ஏஐ கோட்பாடுகளை இணைக்க உதவுதல்;

மாணவர்களுக்கான கற்றல் திட்டங்கள், 'லேர்னத்தான்கள்' மற்றும் நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் சவால்களை நடத்துதல்;

இந்தியா முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுடனான தொடர்பை மேலும் வலுப்படுத்துதல்; மற்றும்

மாணவர்கள் வேலைவாய்ப்பிற்குத் தேவையானத் திறன்களை வெளிப்படுத்த உதவும் தகுதிகள் மற்றும் சான்றிதழ் களைப் பெற ஆதரவளித்தல்.

இதுவரை, இந்தக் கூட்டாண்மையானது 2,00,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைச் சென்றடைந்துள்ளது. ஐசிடி அகாடமியின் கல்வி நிறுவன வலையமைப்பு மற்றும் ஆசிரியர் மேம்பாட்டு அனுபவத்தையும், Qlik நிறுவனத்தின் தொழில்நுட்பம், பாடத்திட்டங்கள் மற்றும் சான்றிதழ் ஆதாரங்களையும் ஒன்றிணைத்து, இந்த மாதிரித் திட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதே இதன் அடுத்த கட்ட நோக்கமாகும்.

## ஏயூ ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் 'வீல்ஸ் பிசினஸ்' ஏயூஎம் ரூ.50,000 கோடியைக் கடந்தது! மூன்று தசாப்த கால நகர்வுத் திறனுக்கும் தொழில்முனைவிற்கும் வலுசேர்க்கிறது

சென்னை 25, செப்டம்பர் 2026: ஏயூ ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி (ஏயூ எஸ்எஃப்பி) - இந்தியாவின் மிகப் பெரிய ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி மற்றும் ஒரு தசாப்தத்திற்கும் மேலான காலத்தில் யுனிவர்சல் வங்கியாக மாறுவதற்கு ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) கொள்கையளவிலான ஒப்புதலைப் பெற்ற முதல் வங்கி - தனது முதன்மையான 'வீல்ஸ் பிசினஸ்' பிரிவின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துகள் (ஏயூஎம்) ரூ. 50,000 கோடி என்ற மைல்கல்லை எட்டியுள்ளதாக இன்று அறிவித்துள்ளது. நிதிச் சாதனைக்கும் மேலாக, இந்த மைல்கல்லானது இந்தியாவின் நகர்வுத் திறன் (மொபிலிட்டி) மற்றும் தொழில்முனைவோர் பயணத்திற்கு கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக வழங்கி வரும் ஆதரவைப் பிரதிபலிக்கிறது.

2026 ஆகஸ்ட் மாதத்தில் வீல்ஸ் போர்ட்ஃபோலியோவின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துகள் (ஏயூஎம்) ரூ.50,000 கோடியைத் தாண்டியதன் மூலம் இச்சாதனை பதிவாகியுள்ளது. வணிகச் சுழற்சிகளுக்கு இடையே நிலையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள இப்பிரிவு, 3 ஆண்டுகால கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (சிஏஜிஆர்) 26 சதவீதத்தையும், 5 ஆண்டுகால கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் 29 சதவீதத்தையும் பதிவு செய்துள்ளது.

மேலும், வங்கியின் மிகப்பெரிய கடன் வழங்கும் பிரிவாகத் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டு, வங்கியின் ஒட்டுமொத்த கடன் போர்ட்ஃபோலியோவில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு பங்களிப்பை அளித்து வருகிறது.

ராஜஸ்தானில் உள்ள சுயதொழில் செய்யும் தொழில்முனைவோர் மற்றும் போக்குவரத்து நிறுவனர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் 1996 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இது, இன்று நாடு முழுவதும் 13.7 லட்சத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்கி, இந்தியாவின் முன்னணி வாகன நிதிச் சேவைகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது. வாடிக்கையாளர் நம்பிக்கை, கடன் வழங்கல் மதிப்பீட்டுத் திறன் (அண்டர்ரைட்டிங் எக்ஸ்பர்டைஸ்) மற்றும் முறையான இடர் மேலாண்மை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடப்பட்டுள்ள இந்த வணிகம், இந்தியா முழுவதும் நகர்வுத் திறன், தொழில் முனைவு மற்றும் முன்னேற்ற ஆசைகளிலான வளர்ச்சியை சாத்தியமாக்கும் தனது தொடக்க லட்சியத்திலேயே நிலைத்து நிற்கிறது.

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக இந்தியாவின் கனவுகளுக்கு நிதியுதவி

கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக, ஏயூ வங்கியின் 'வீல்ஸ்' பிரிவு போக்குவரத்து நிறுவனர்கள், விவசாயிகள், ஒப்பந்ததாரர்கள், டாக்ஸி உரிமையாளர்கள், முதன்முறை வாகன வாங்குபவர்கள், சிறு வணிகங்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்முனைவோருக்கு அவர்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் உயர்த்தும் உற்பத்தி சொத்துகளைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கி அவர்களை வலுப்படுத்தியுள்ளது.

## வாகீசன் - மோனிஷாவின் 'அன்னக்கிளி' - 72 மணி நேரத்தில் 3 மில்லியன் பார்வையாளர்களை கடந்து சாதனை!



சென்னை 25, செப்டம்பர் 2026: பிராண்ட் பிளிட்ஸ் எண்டர்டெய்ன்மெண்ட்-ன் சமீபத்திய இசை வெளியீடான 'அன்னக்கிளி', வாகீசன் ராசையாவின் முதல் ஆல்பமான _தமிழ் கிறுக்கனின் முதல் பாடல், ரசிகர்களின் இதயங்களை வென்று வருகிறது. வெளியான 72 மணி நேரத்தில் 3 மில்லியன் பார்வையாளர்களை கடந்து புதிய சாதனை படைத்துள்ளது.

வாகீசனால் எழுதி, பாடி, நடிக்கப்பட்ட 'அன்னக்கிளி', தனது சிறுவயது காதலிக்குக் காதலை தெரிவிக்கும் இளைஞனின் இனிமையான கதையை உயிர்ப்பிக்கிறது. கிராமிய தமிழ்நாட்டின் வண்ணமயமான பின்னணியில், இளம் காதலின் அப்பாவித்தனம், வெட்கம் மற்றும் விளையாட்டுத்தனமான கேலியை அழகாக படம்பிடிக்கிறது.

சமீபத்தில் எத்திராஜ் கல்லூரியில் ஜென் சி மாணவர்களிடமிருந்து இந்த பாடலுக்கு அமோக வரவேற்பு கிடைத்தது, இது குழுவை மேலும் உற்சாகப்படுத்தியுள்ளது.

டாப் குக்கு டூப் குக்கு நிகழ்ச்சி மூலம் பிரபலமான மோனிஷா பிளெஸ்ஸி, இந்த பாடலில் வாஹீசனுடன் அழகான கெமிஸ்ட்ரியை பகிர்ந்து பாடலுக்கு மேலும் அழகு சேர்க்கிறார்.

சிவ பத்மயன் இசையமைத்துள்ள 'அன்னக்கிளி', மண்ணின் நாட்டுப்புற இசையையும் துடிப்பான ராப் இசையையும் கலந்து, பாரம்பரிய கிராமிய காதலுக்கு புதுமையான தொடுதலை கொடுக்கிறது. கிரிபாகர்ஜெய் ஜெ இயக்கியுள்ள இந்த வீடியோ, காதல் கதையின் இதயத்தை தக்கவைத்து, வேடிக்கையான, வண்ணமயமான மற்றும் இளமை துள்ளலுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

வாகீசன் மற்றும் பிராண்ட் பிளிட்ஸ் எண்டர்டெய்ன்மெண்ட்-க்கு 'அன்னக்கிளி' என்பது தமிழ் கிறுக்கன் உடனான ஐந்து பாடல்கள் கொண்ட இசைப் பயணத்தின் உற்சாகமான தொடக்கமாகும்.

புதுமையான இசை, அழகான காதல் மற்றும் தவிர்க்க முடியாத நாட்டுப்புற இசையுடன், 'அன்னக்கிளி' பழைய பள்ளி காதலுக்கு இன்னும் ஜென் சி கூட்டம் இருப்பதை நிரூபிக்கிறது.

டாக்டர். ஜெ.பி. லீலாராம், ராஜீ .க, சரவணன். பா , ரேகா . லீ தயாரிப்பில் உருவாகிய 'அன்னக்கிளி ' இப்போது பிராண்ட் பிளிட்ஸ் எண்டர்டெய்ன்மெண்ட் யூட்யூப் சேனலில் ஒளிப்பரப்பப்படுகிறது.

## தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி தமிழ்நாடு காங்கிரஸ் இன்று (25.09.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அண்ணா சாலை தர்கா, தாராப்பூர் டவர் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் - மாணிக்கம் தாகூர் ப



சென்னை 25, செப்டம்பர் 2026: பா.ஜ.க. அரசின் எதிர்ப்புக் குரலாக ஒலித்து வருகிற மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள் தொடர்ந்து முன்வைத்து வந்த வாக்குத் திருட்டு மற்றும் தேர்தல் ஆணையத்தன் ஒரு தலைப்பட்சமான செயல்பாடுகள் குறித்த குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மை என்பதை இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் 10 மாத புலனாய்வுத் தரவுகள் நாட்டு மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் தவிர்த்து, தேர்தல் ஆணையத்தில் அங்கும் வகிக்கும் மற்ற இரண்டு தேர்தல் ஆணையர்களான சுக்பீர்சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் கடந்த 10 மாதங்களில் மட்டும் 14 முறை எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனைகளை பதிவு செய்துள்ளனர். ஆனால், அவர்களின் எதிர்ப்புகள் அனைத்தையும் அமித்ஷாவின் ஆணைக்கேற்ப தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக புறந்தள்ளியுள்ளார். ஞானேஷ்குமார் என்பவர் தலைமை தேர்தல் ஆணையராக இருந்தாலும் மூன்று தேர்தல் ஆணையர்களும் சமமான அதிகாரம் படைத்தவர்கள். மற்ற தேர்தல் ஆணையர்களை விட தலைமை தேர்தல் ஆணையருக்கு அதிக அதிகாரம் இல்லை.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் தேர்தல் விதிகளை மீறி படிவம் 6-ன் மூலமாக சட்ட விரோத மாற்றங்களை செய்து லட்சக்கணக்கான இளம் வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்யாமல் அலைகழித்துள்ளனர். ஏறத்தாழ 12 கோடி வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறது. 2024 தேர்தலில் பதிவு செய்யப்பட்ட 97 கோடி வாக்காளர்களில் இது ஏறத்தாழ 12.4 சதவிகிதமாகும். பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும், எதிர் கட்சிகளுக்கும் இடையே 2 சதவிகித வித்தியாசத்தில் தான் தேர்தல் வெற்றி அமைந்தன. இந்த வகையில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அப்பட்டமான ஜனநாயகப் படுகொலை செய்துள்ளார்.

தலைமை தேர்தல் ஆணையரின் ரூடவடிக்கை முற்றிலும் சட்ட விரோதமானது என மற்ற இரண்டு ஆணையர்களும் எச்சரித்த போதும், டெல்லியில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பிரிவு தன்னிச்சையாக மென்பொருளை கட்டுப்படுத்தி கள அதிகாரிகளான வாக்காளர் பதிவு அலுவலர்களின் அதிகாரத்தை பறித்து ஒட்டுமொத்த வாக்காளர் பட்டியல் தரவு தளத்தையும் முறைகேடாக கையாள முற்பட்டுள்ளது. இந்த செயல்பாடுகள் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் கைப் பாவையாக தேர்தல் ஆணையம் செயல்படுவதை உறுதி செய்வதோடு, வாக்குத் திருட்டு என்பது மக்களுக்கு எதிரான குற்றம் என்பதோடு, அரசமைப்புச் சட்டத்தின் மீதான நேரடி தாக்குதல் என்றும், பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., மற்றும் தேர்தல் ஆணையம் கூட்டு சேர்ந்து மிகப்பெரிய சதித் திட்டத்தை அரங்கேற்றியுள்ளது. இத்தகைய அநீதியிலிருந்து நீதி கிடைக்கும் என்கிற நம்பிக்கையை தலைவர் ராகுல்காந்தி வெளிப்படுத்தியுள்ளார். இதன்மூலம் உண்மையான நாட்டுப்பற்றை மீண்டும் உலகத்திற்கும் நிரூபித்துள்ளார்.


## கோத்ரேஜ் லிட்டரேச்சர் லைவ்! மும்பை லிட்ஃபெஸ்ட் 2026, எழுத்தின் உன்னதமான கலைத்திறனைக் கொண்டாடுகிறது அக்டோபர் 23 - 25, 2026, என்சிபிஏ-மையத்தில்

சென்னை 25, செப்டம்பர் 2026: 16 நிகழ்வுகளுக்கும் மேலாக, மும்பைக்கே உரித்தான இந்த இலக்கியத் திருவிழா விரிவடைந்து, நகரின் கலாச்சார உயிர்ப்பை விரிவுபடுத்தியுள்ளது மேலும் மெருகூட்டியுள்ளது. ஆண்டு தோறும் எதிர்பார்க்கப்படும் இந்தக் கொண்டாட்டம், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள் மற்றும் பல்வேறு வயது, ஆர்வங்கள், மனப்போக்குகள் கொண்ட பார்வையாளர்களுக்கு இடையே அர்த்தமுள்ள உரையாடல்களுக்கான உயிர்ப்பின் இடமாக விளங்குகிறது.

இந்த 2026 நிகழ்வு அக்டோபர் 23-25 வரை அதன் நிரந்தர “கடலோர விடான” நேஷனல் சென்டர் ஃபார் தி பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் (என்சிபிஏ)-மையத்தில் நடைபெறும். இந்த ஆண்டு, அதன் 17-வது நிகழ்வில், கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமம் டைட்டில் பார்ட்னராக இணைவதன் மூலம் இந்த விழா ஒரு புதிய மற்றும் உற்சாகமான அத்தியாயத்தில் நுழைகிறது.ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, கோத்ரேஜ் கலை மற்றும் தொழில்துறை, கவிதை மற்றும் முன்னேற்றத்தின் சங்கமத்தில் 'Genius of &' எனும் தத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக கோத்ரேஜ் நிறுவனம் திகழ்ந்து வருகிறது. இந்தியாவின் மிக முன்னேற்றமான இலக்கிய நிகழ்வுகளில் ஒன்றின் கட்டமைப்பாளர்களாக பல ஆண்டு பயணத்தைக் குறிக்கின்ற வகையில் இந்த ஆண்டு, இந்த குழுமத்தின் புதுப்பிக்கப்பட்ட 'கிராஃப்டிங் டுமாரோ' (நாளையை வடிவமைத்தல்) என்ற கருத்தாக்கம், விழாவின் அடிப்படை இயல்புடன் சீராக பொருந்துகிறது.

கோத்ரேஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் தலைமை தொடர்பு அதிகாரி சுஜித் பாட்டீல் கூறும்பொழுது, “கோத்ரேஜ் லிட்டரேச்சர் லைவ்! மும்பை லிட் ஃபெஸ்ட் 2026 விழா, இலக்கியம் மற்றும் சிந்தனைமிக்க உரையாடல்கள் மீதான மும்பையின் காதலைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, கோத்ரேஜ் நிறுவனத்தில் நாங்கள், கவிஞர்கள் மற்றும் பொறியாளர்கள் இருவருக்கும் ஒரு இல்லமாக விளங்குகிறோம்; கனவு காண்பவர்கள் மற்றும் கட்டியெழுப்புபவர்களின் இல்லமாக. அந்த இரட்டைத் தன்மையானது, '1897 முதல் நாளைய உலகை வடிவமைக்கிறோம்' என்ற எங்கள் நோக்கத்தின் மையத்தில் அமைந்துள்ளது, அதனால் தான் இந்த இணைப்பு ஒரு கூட்டாண்மை போலவே தோன்றாமல், ஒரு இல்லம் திரும்புதல் போலவே உணரப்படுகிறது. இந்த விழாவை வடிவமைக்க உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்” என்றார்.

## சிஐஐ கல்வி-தொழில்நுட்ப கண்காட்சி 2026-இல் ஏஐ-சார்ந்த கற்கும் புதுமைகளை எச்சிஎல்டெக் காட்சிப்படுத்துகிறது




சென்னை 25, செப்டம்பர் 2026: முன்னணி உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனமான எச்சிஎல்டெக், செப்டம்பர் 24 முதல் 26 வரை சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் 'இந்தியத் தொழில் கூட்டமைப்பின்' (சிஐஐ) கல்வி-தொழில்நுட்ப கண்காட்சி 2026- இன் இரண்டாவது பதிப்பில் பங்கேற்கிறது. 'கோல்ட் ஸ்பான்சர்' எனும் நிலையில், செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் ஆழ்நிலை தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை கற்பித்தல், கற்றல் மற்றும் பணியாளர் திறன் மேம்பாடு ஆகியவற்றை எவ்வாறு மாற்றியமைக்கக்கூடும் என்பதை இந்நிறுவனம் இதில் காட்சிப்படுத்தவுள்ளது.

“கோட்பாட்டிலிருந்து நடைமுறைக்கு: பல்வேறு துறைகளில் ஆழ்ந்த கற்றல்” என்ற தலைப்பிலான குழு அமர்வில் பங்கேற்பதன் மூலம், கற்றலின் நுதிர் காலம் குறித்த தொழில் துறை விவாதங்களுக்கு எச்சிஎல்டெக் பங்களிக்கும்”. எச்சிஎல்டெக்கின் கல்வித் தொழில்நுட்பப் பிரிவின் மூத்த துணைத் தலைவர் அம்பிகா நடராஜன், கல்வித் துறை, தொழில் துறை மற்றும் அரசாங்கத் தலைவர்களுடன் இணைந்து, ஆக்மென்ட்டட் ரியாலிட்டி, விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் டிஜிட்டல் ட்வின்ஸ் உள்ளிட்ட ஆழ்ந்த தொழில்நுட்பங்கள், மேலும் ஈடுபாடு மிக்க, விரிவாக்கக்கூடிய மற்றும் நிஜ உலகக் கற்றல் அனுபவங்களை உருவாக்க எவ்வாறு உதவுகின்றன என்பது குறித்து விவாதிப்பார்.

உயர்கல்வித் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் கல்வியில் செயற்கை நுண்ணறிவின் நடைமுறைப் பயன்பாடுகளை ஆராய்வதற்கு உதவும் வகையில், “கல்வியாளர்களுக்கான செயற்கை நுண்ணறிவு: கற்பித்தல் மற்றும் பயிற்சிக்காக உங்கள் சொந்த செயற்கை நுண்ணறிவு முகவரை உருவாக்குங்கள்” என்ற தலைப்பிலான ஒரு செய்முறைப் பட்டறையை எச்சிஎல்டெக் நடத்தும்.

பாடத் திட்டமிடல், உள்ளடக்க உருவாக்கம், மாணவர் ஈடுபாடு மற்றும் தனிப் பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவங்களுக்கு ஆதரவளிக்க, செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் உதவியாளர்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பதை இந்தப் பட்டறை விளக்குகிறது.

## பத்மஸ்ரீ டாக்டர் டி.எம்.எஸ். விருது -2026 வழங்கி கௌரவிக்கப்பட்ட நேத்ராஸ்ரீ டாக்டர் லயன் ஜே. கணேஷ்!



மதுரை 25, செப்டம்பர் 2026: பத்மஸ்ரீ டாக்டர் டி.எம். சௌந்தரராஜன் ரசிகர் மற்றும் நலச் சங்கத்தின் 40-வது ஆண்டு விழா மதுரையில் உள்ள புகழ்பெற்ற தமிழ்நாடு வர்த்தக மற்றும் தொழில் சம்மேளன வளாக அரங்கில் சிறப்புற நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்வில் சிவகாசி பிரைட் விஷன் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத் தலைவரும், கண் தானம் மற்றும் உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு அர்ப்பணிப்புள்ள சேவையையும் பங்களிப்பையும் சிறப்பாக செய்து வரும் சிவகாசியை சேர்ந்த நேத்ராஸ்ரீ டாக்டர் லயன் ஜே. கணேஷ் அவர்களுக்கு பத்மஸ்ரீ டாக்டர் டாக்டர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் புதல்வர் திரு. டி.எம்.எஸ். பால்ராஜ் அவர்களால் மதிப்புமிக்க பத்மஸ்ரீ டாக்டர் டி.எம்.எஸ். விருது 2026 வழங்கி கௌரவிக்கப்பட்டது.